(ஏ) காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகப் பேரவைக்கு (செனட்) ஒன்பதாவது சட்ட மன்றப் பேரவையின் சார்பில் பணியாற்ற இப்பேரவை உறுப்பினர்களிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு கோரியுள்ளது. ஓர் உறுப்பினர், தீர்மானம் முன்மொழிவதன் மூலம் தேர்ந்தெடுக்கப் பெற வேண்டும்.

(ஐ) கோவை பாரதியார் பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோவை, பாரதியார் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு (செனட்) 20-11-1989 வரை பணியாற்ற இப்பேரவை உறுப்பினர்களிலிருந்து இருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அப்பல்கலைக் கழகம் கோரியுள்ளது. இரு உறுப்பினர்கள் தீர்மானம் முன்மொழிவதன் மூலம் தேர்ந்தெடுக்கப் பெறவேண்டும்.

இதற்கான தீர்மானங்கள் 24-4-1989 முற்பகல் 11.00 மணிக்குள் செயலாளரிடம் கொடுக்கப் பெற வேண்டும்.

5. கவன ஈர்ப்பு,

(அ) காமராசர் மாவட்டம் உருவாக்கப்பட்ட பிறகு அதற்கென மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தனியாக இயங்காதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தங்கபாண்டியன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்தைஈர்க்க முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார். தற்போது திரு. வே. தங்கபாண்டியன் அவர்களின் சார்பில் திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி உணவு அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

*திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பின திரு. வே. தங்கபாண்டியன் அவர்கள் பெயரால் கொடுக்கபட்டிருக்கிற இக்கவனஈர்ப்புத் தீர்மானத்தைத் தங்கள் சார்பி பன்னிக்கவும்—தங்கள் மூலமாக மாண்புமிகு உணவு அமைச்